**பாதெனியா - அநுராதபுரம் வீதி முன்னேற்றச் செயற்திட்டம் - 2018**

பாதெனியா - அநுராதபுரம் வீதி முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் கொரிய ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2008 திசெம்பர் 19 ஆந் திகதிய எஸ்ஆர்ஜ-18 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சாகவிருந்த தற்போதைய வீதி மற்றும் நெடுஞ்சலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. செயற்திட்டத்தின் நோக்கங்களாவன (அ) இலங்கையின் வடமத்திய பிராந்தியத்தில் பிரதான போக்குவரத்து பகுதியில் அமைந்துள்ள பாதெனியா– அநுராதபுரத்திற்கிடையிலான வீதிப் பிரிவை முன்னேற்றுவதன் ஊடாக சமூக கிரயங்களை குறைத்து கைத்தொழில் போட்டியினை உயரத்த்துவதன் மூலம் பிராந்தியத்தின் பொருட்கள் மற்றும் மக்களின் பரிமாற்றத்தை செயற்படுத்துவதும் அதேபோல் தேசிய பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமப்படுத்தப்பட்ட பிராந்திய அபிவிருத்தி என்பவற்றை உயர்த்துவதையும் மற்றும் (ஆ) கட்டுநாயக்கா – பாதெனியா பிரிவு வீதியை இணைப்பதற்கு திட்டமிடுவதுடன் இது கலாச்சார மரபுரிமை மற்றும் சுற்றுலாப் பயணிகளை கவருவதில் செழிப்பாகவுள்ள இலங்கையின் வடமத்திய பிராந்தியம் என்பவற்றிற்கிடையில் பிரயாணிகள் போக்குவரத்து வசதியளிப்பதன் மூலம் இலங்கையினுடைய சுற்றுலாக் கைத்தொழிலின் சர்வதேச போட்டித்தன்மையை வலுப்படுத்துவற்கு நம்பிக்கையளிக்கின்றது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ஐ.அ.டொலர் 81.73 மில்லியனிற்கு சமமான ரூபா 10,902.90 மில்லியனானதுடன் அதில் ஐ.அ.டொலர் 66.32 மில்லியனிற்கு சமமான ரூபா 8,786.93 மில்லியன் கொரிய ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை ரூபா 2,115.97 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது.செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2009 யூலை 01 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2012 சனவரி 01 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2012 நவம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை

வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிா்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. பௌதீக முன்னேற்றம்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

வீதியின் மீள் நிர்மான வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 2012 நவம்பர் 30 இல் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்ட கண்காணிப்பு பிரிவின் செயற்பாடுகள் காணி சுவீகரிப்பின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் காரணமாக 2018 திசெம்பர் 31 வரை தொடரப்பட்டிருந்தது.

### 2.3 சச்சரவுத்தன்மையான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் சிவில் வேலைகள் 2012 நவம்பர் 30 இல் பூர்த்தியாக்கப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்ட கண்கானிப்பு பிரிவு இன்னும் தொடரப்படுவதுடன் செயற்பாடுகளை முடிவுறுத்தவும் செயற்திட்டத்தின் கணக்குகளை மூடவும் நிறைவேற்று முகவரினால் எவ்வித அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட கண்கானிப்பு பிரிவின் செயற்பாடுகள் குறித்த நோக்கமில்லாமல் தொடரப்படுகின்றது. | காணி சுவீகரிப்புக்கள் மீதான சில கொடுப்பனவுகள் காணப்பட்டதிலிருந்து செயற்திட்ட கண்காணிப்பு பிரிவானது அக் கொடுப்பனவுகள் தீர்க்கப்படும் வரை தொடரப்பட்டிருந்தது. | காணி சுவீகரிப்புக்கள் மீதான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பொறுப்பினை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் மாற்றப்பட வேண்டியதுடன் செயற்திட்டத்தின் செயற்பாட்டு கிரயங்களை குறைக்கவும் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெறப்பட்டிருந்த ரூபா 11.28 மில்லியன் தொகையான விசேட முற்பணம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுத்து தீர்க்கப்படாமல் இருந்தது. | செலுத்தப்படாத மீதிகளின் தொடர்ச்சித்தன்மை. | முற்பணங்களை கொடுத்து தீர்ப்பதற்கு போதுமான ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறவில்லை. | மீதிகளை கொடுத்த தீர்க்கும் வகையில் கணக்குகள் சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |